1971 ஜூலை 8]

திருப்பூரில் அரசுப் பணியாளர் வாடகை வீட்டு வசதித் திட்டம்.

* 164 வினு—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், திருப்பூரில், அரசு ஊழியர்கள் வாடகைத் திட்டத்தின் கீழ் வீட்டு வசதி வாரியம் 1970-ம் ஆண்டில் வீடு கட்ட அரசு பணம் ஒதுக்கியுள்ளதா?

(இ) ஆம் எனில், எவ்வளவு ரூபாய்?

(உ) மேற்படி வேலை துவக்கப்பட்டு விட்டதா?

(எ) இல்லை எனில், காரணம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (இ); (உ) & (எ) ஆம். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலைவர், திருப்பூரில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் வாடகை வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் ரூ. 9.94 லட்ச செலவில் 96 அங்கணங்கள் கட்டுவதற்கான திட்டத்தை அனுப்பினர். அவர் இத் திட்டத்திற்குரிய வேலைகளை அரசின் ஒப்புதலை எதிர்பார்த்து முன்னதாகவே ஆரம்பித்து விட்டார்.

திரு. சு. துரைசாமி: மேற்படி இடத்தில் வீடு கட்டும் திட்டத்திற்காக கடந்த ஆண்டு 3 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்தத் திட்டத்தை முடிக்க 9 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. இந்த நடைமுறை ஆண்டில் அதற்கு வேண்டிய பணத்தை ஒதுக்கி வீடுகளை அரசு விரைவில் கட்டி முடிக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அதற்கான அடிக்கல் நாட்டு விழா சமீபத்தில் நடைபெற்றிருக்கிறது. திட்டப்படி அந்த வேலைகள் முடியும். அரசாங்கச் செலவுகள் வேலைமுறைப்படி செய்யப்படும்.

சென்னை மாநகரில் மின்சார பஸ்கள்.

* 165 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரில் மின்சார பஸ்கள் விடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தற்போது ஓடிக் கொண்டிருக்கும் பஸ்களினுல் நகரத்தில் அதிகமான புகை சூழவும், இரைச்சல் ஏற்படவும் காரணமாக இருப்பதால் புதிதாக மின்சார பஸ்கள் விடப்பட்டால் அத்தகைய தொல்லைகள் போக்கப்படுவதோடு கூட அதிக வேகத்திலும் செல்ல வகை ஏற்படும் என்ற காரணத்தால் அத்தகைய பஸ்களை விட அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மின்சார பஸ்கள் விடுவது என்பது இப்போது நம் நாட்டில் சாத்தியமில்லை. அயல்நாடுகளில் கூட மின்சாரத்தைப் போக்குவரத்துக்குப் பயன்படுத்துவது பற்றிய